30—

புதிய வகுப்பறைகள்

***1165—திரு. தி. வேல்முருகன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, அங்குசெட்டிப்பாளையம் ஊராட்சி, கொக்குபாளையம் தொடக்கப் பள்ளியைச் சீரமைக்கவும், புதிய வகுப்பறைகள் கட்டவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். தங்களுடைய அனுமதியுடன், பண்ருட்டி சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் மாண்புமிகு திரு. வேல்முருகன் அவர்கள் கேட்டதுபோல, அங்குசெட்டிப்பாளையம் ஊராட்சி, கொக்குபாளையத்திலுள்ள தொடக்கப் பள்ளி, கிட்டத்தட்ட 59 மாணவர்கள் படிக்கின்ற இரண்டு ஆசிரியர்கள் பள்ளி. இது 1960–களில் தொடங்கப்பட்டது. தந்தை பெரியார் அவர்களால் பள்ளிக்கூடத்தில் தமிழ்த்தாய் வாழ்த்து மட்டுமல்ல, காமராஜருடைய வாழ்த்தையும் நாம் பாடலாம் என்று சொல்கின்ற, நம்முடைய காமராஜர் அவர்களுடைய காலத்தில் தொடங்கப்பட்ட பள்ளிக்கூடம், அந்த பள்ளிக்கூடம். ஏற்கெனவே administrative sanction *கடந்த 4 ஆம் தேதி பெறப்பட்டு, கிட்டத்தட்ட 34.12 இலட்சம் ரூபாய் அதற்கென்று தனியாக ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதற்கான வேலைகள் தொடங்கப்பட இருக்கின்றன. அங்கே மட்டுமல்ல, ஒட்டுமொத்தமாக, கடலூர் மாவட்டத்தில் 148* school buildings, *296* class rooms *கட்டுவதற்கு 46 கோடி ரூபாய் தனியாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது.*

தற்போது தென்காசி மாவட்டத்தில் ஆராதனா என்கின்ற 3 ஆம் வகுப்பு படிக்கின்ற குழந்தை பள்ளிக் கட்டடம் வேண்டுமென்று சொன்னபோது, உடனடியாக (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கோரிக்கையை நிறைவேற்றியவர்தான் நம்முடைய மாண்புமிகு

2023 ஜனவரி 13]

முதலமைச்சர் அவர்கள். 3 ஆம் வகுப்பு படிக்கின்ற ஆராதனா மட்டுமல்ல, 3—வது முறையாக சட்டமன்றத்திற்கு வந்திருக்கின்ற திரு. வேல்முருகன் அண்ணன் அவர்களின் கோரிக்கையையும் ஒன்றாகப் பார்க்கக்கூடிய வகையில் செயல்படுவது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், தமிழக அரசும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, கூடுதல் கட்டடம்; 7.5 சதவிகிதம் என்பது ஏதோ மருத்துவப் படிப்புக்கு மட்டுமல்ல, அனைத்து தொழில் படிப்புகளுக்கும் உண்டு என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததற்குப் பிறகு, counselling fees *உங்களுக்கு* free, *அதை அரசே ஏற்றுக்கொள்ளும்.* Hostel fees*-ஐ அரசே ஏற்றுக்கொள்ளும்.* Tuition fees*-ஐ அரசே ஏற்றுக்கொள்ளும். ஏன்,* counselling*-க்கு நீங்கள் வந்துவிட்டுப் போகிற செலவையும் அரசே ஏற்றுக்கொள்ளும் என்ற பிறகு, நம்முடைய அரசுப் பள்ளியில் படித்த 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் இப்போது சேர்ந்திருக்கிறார்கள். அந்தக் கூடுதல் கட்டடத்திற்கும் சேர்த்து,* RD Department*-லிருந்து கிட்டத்தட்ட 800 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்றால், முதற்கட்டமாக அதிலிருந்து 30 சதவிகிதம், 240 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதற்கான ஆணையையும் நாம் வழங்கியிருக்கின்றோம்.*

இன்னும் ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி என்னவென்றொல், இது, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் வைக்கின்ற கோரிக்கைதான். என்னுடைய தொகுதியில் இந்த கட்டடங்கள் கட்டித் தர முடியுமா என்கிற கேள்விகள் கேட்கப்படும். வருகின்ற ஜனவரி 27 ஆம் தேதி அன்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவர்களுடைய திருக்கரங்களால் அடிக்கல் நாட்ட இருக்கின்றார்கள். ஏறத்தாழ 172 தொகுதிகளில் இருக்கின்ற இதுபோன்ற பள்ளிக் கட்டடங்கள் (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே கண்டறியப்பட்டிருக்கின்றன. அதற்கான அடிக்கல் நாட்டுவிழாவும் அன்றைக்கு நடைபெற இருக்கின்றது. இனி தொடர்ந்து இதைப் படிப்படியாகச் செய்கின்ற பணியில் நாங்கள் எங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்வோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் கேள்வி கேட்பதற்கு வழியே இல்லாமல், அவ்வளவு பதிலையும் சொல்லிவிட்டீர்களே! மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கும், அந்தப் பணியைச் செய்வதற்கு உத்தரவிட்டமைக்காகவும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். அதேவேளையில், என் தொகுதியில் L.N. புரம், மணம்தவிழ்ந்தபுத்தூர், நத்தம், திருத்துறையூர், பாலூர் மற்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன கொக்குபாளையம், அங்குசெட்டிப்பாளையம் உள்ளிட்ட இடங்களில் உள்ள பள்ளிகள்—ஏற்கெனவே உங்களுக்குத் தெரியும்—சுனாமி ஆழிப்பேரலை, தானே புயல், வர்தா புயல் மற்றும் ஒகிப் புயலின் காரணமாக கடலூர் மாவட்டத்தில் உள்ள அந்தப் பள்ளி compound-க்குள் இருக்கின்ற அனைத்து மரங்களும் விழுந்துவிட்டன. வகுப்பறை மேல் இருக்கின்ற ஓடுகள் எல்லாம் சிதிலமடைந்து பாதிக்கப்பட்டுவிட்டன. நான் அனைத்து பள்ளிகளுக்கும் நேரடியாகச் சென்று ஆய்வு செய்தேன். அதுபோன்று உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் அங்குசெட்டிப்பாளையம், மேல்பட்டாம்பாக்கம், மாளிகம்பேடு, நெல்லிக்குப்பம், பண்ருட்டி, சிறுகிராமம், வீரபெருமாநல்லூர், கோழிப்பாக்கம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியைக் கேளுங்கள்.

திரு. தி. வேல்முருகன்: திருத்துறையூர், பாலூர், திருவதிகை உள்ளிட்ட இத்தனை பள்ளிகளிலும் படிக்கின்ற மாணவச் செல்வங்கள் இன்றைக்கு மரத்தடிகூட இல்லாமல் மழைக்காலங்களில் கீழே உட்கார்ந்து படிக்க முடியாமல், குறிப்பாக 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு படிக்கின்ற மாணவிகள் மிகப் பெரிய அவதிக்குள்ளாகிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் சிறப்பு அனுமதியைப் பெற்று கட்டடங்களைக் கட்டித் தர வேண்டும். இயற்கை பேரிடர்களால் அந்தப் பள்ளி வளாகத்திற்குள் மரங்கள்கூட இல்லாமல், நிழலில்கூட அமர முடியாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

2023 ஜனவரி 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மரங்கள் என்னாயிற்று?*

திரு. தி. வேல்முருகன்: *மரங்கள் இல்லாத அந்த தொகுதிக்கு முன்னுரிமை அடிப்படையில் கட்டடங்கள் கட்டித் தர வேண்டும். மாடத்தில் நம்முடைய பள்ளிக் கல்வித் துறை செயலாளர் அவர்கள் இருக்கிறார்கள். 'உங்கள் தொகுதியில் முதல்வர்' திட்டத்தில் 3 பள்ளிகளை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் தந்திருக்கிறேன். ஆகையால், தயவுசெய்து நம்முடைய ஆட்சிக் காலத்தில் அனைத்துப் பள்ளிகளுக்குமான கட்டடங்களைக் கட்டி, மாணவர்கள் சீரான கல்வி பயில்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–30

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றில் இல்லாத ஒரு திட்டமாக 7,500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பேராசிரியர் அன்பழகனார் பள்ளிகள் மேம்பாட்டுத் திட்டத்தை (மேசையைத் தட்டும் ஒலி) வகுத்துத் தந்தவர், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். பொதுவாக,* maintenance and repair *என்று வருகிறபோது கடந்தகால ஆட்சியில், அனைத்துப் பள்ளிக்கூடங்களுக்கும் சேர்த்து ஒட்டுமொத்தமாக 30 கோடி ரூபாயை வழங்குவது வழக்கம். ஆனால், இந்த முறை நாங்கள் எல்லா* CEOs*–க்கும் முதன்முறையாக 150 கோடி ரூபாயை* maintenance and repair*–க்காக அதிகப்படியாக வழங்கியிருக்கிறோம்.*

அவர் சொன்னது உண்மைதான். நிறைய இடங்களில் dilapidated buildings *இருக்கின்றன. எவற்றையெல்லாம் நாம்* demolish *செய்ய வேண்டுமோ, அவற்றையெல்லாம் செய்ய வேண்டும். அந்தமாதிரியான ஒரு பிரச்சினை இருக்கிறது. திருமங்கலம் தொகுதியில் நானே நேரடியாக ஒரு* surprise visit *மேற்கொண்டபோது, அங்கிருந்த குழந்தைகள் மரத்தடியில் உட்கார்ந்து படிக்கின்ற நிலையைப் பார்த்துவிட்டு, உடனடியாக எங்களுடைய அதிகாரிகளிடமும் எடுத்துச் சொல்லியிருக்கின்றோம். இதுபோன்ற இடங்களில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் எந்த*

இயக்கத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், அவர்களிடமிருந்து ஒரு list வாங்கிக்கொள்ளுங்கள். அந்தப் பள்ளிகளுக்கு priority அடிப்படையில் செய்துகொடுங்கள் என்று முதன்மைக் கல்வி அலுவலர்களிடம் சொல்லியிருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோன்று, மரமே இல்லாத இடத்தில் உட்கார்ந்து படிக்கின்ற குழந்தைகளாக இருந்தாலும் சரி, மரத்தடியில் அமர்ந்து படிக்கின்ற குழந்தைகளாக இருந்தாலும் சரி, அவர்களுக்கெல்லாம் உரிய வழிவகை செய்ய வேண்டும். அதற்கு முன்னுரிமை வழங்க வேண்டுமென்று ஏற்கெனவே நாங்கள் order கொடுத்திருக்கிறோம். எனவே, கவலைப்பட வேண்டாம். இனிவரும் காலங்களில் அவை ஒவ்வொன்றையும் படிப்படியாக நிறைவேற்றுகின்ற விதத்தில் நாங்கள் செயல்படுவோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தது, நம்முடைய ஆட்சி பொறுப்பேற்றதிலிருந்து மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் ஒரு கோரிக்கையை வைத்துக்கொண்டிருக்கிறேன். பண்ருட்டியில் 3,000 மாணவ, மாணவியர் படிக்கின்ற உயர்நிலைப் பள்ளி ஒன்றில் பெண்களுக்கென்று தனியாக ஒரு பள்ளி வேண்டுமென்று கேட்டு, கடந்தகால ஆட்சியில் அனுமதியைப் பெற்றிருக்கிறேன். ஆனால், இருபாலரும் ஒரே வகுப்பறையில், ஒரே இடத்தில் நெருக்கடியில் படிக்கிறார்கள். அங்கு கொஞ்சம் சமூக பதற்றம் உருவாகி வருகிறது. பள்ளி மாணவிகளை வைத்து பல்வேறு விதமான சாதிய மோதல்கள் உருவாகின்றன. உங்களுக்குத் தெரியும். பெண்கள் பள்ளியும், ஆண்கள் பள்ளியும் ஒன்றாக இருக்கின்ற அந்த வளாகத்திற்குள் படிக்கின்ற 3,000 மாணாக்கர்களில், 1,000-க்கும் மேற்பட்ட மாணவிகள் இருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறப்பு நேர்வாகக் கருதி, மாணவிகளுக்கென்று தனியாக பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஒன்றினை எங்கள் தொகுதியில் நீங்கள் அமைத்துத் தர வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்களை ஒன்றரை ஆண்டாக என்னுடைய தொகுதிக்கு

2023 ஜனவரி 13]

வாருங்கள் என்று அழைத்துக் கொண்டிருக்கிறேன். கண்டிப்பாக வந்து நீங்களே பார்வையிட்டு, அதைச் செய்து தர வேண்டும்.

அதேபோன்று, நத்தம் நடுநிலைப் பள்ளியை, உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்துவதற்கு அரசுக்குச் செலுத்த வேண்டிய தொகை கட்டப்பட்டுவிட்டது. இடம் தேர்வு செய்தாகிவிட்டது. ஆனால், அதற்கு இன்னும் அனுமதி கிடைக்கவில்லை. இந்த இரண்டையும் நடப்பு நிதியாண்டிலேயே மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் செய்து தர வேண்டுமென்கிற வேண்டுகோளை முன்வைக்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எனது தொகுதியில் 'உங்கள் தொகுதியில் முதல்வர்' திட்டத்தின்கீழ் 3 பள்ளிகளுக்கு முறையே 7, 9, 11 வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்டுவதற்கு அனுமதித்ததற்காக நெஞ்சார்ந்த நன்றியை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்கார்ந்து கேளுங்கள். மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலின வேறுபாடு இருக்கக் கூடாது, அனைவரும் சமம் என்று நினைப்பதுதான் அரசாங்கத்தினுடைய கொள்கை. இருந்தாலும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், தன்னுடைய கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். அவர் மட்டுமல்ல, இங்கே நம்முடைய மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களும், நம்முடைய மாண்புமிகு சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்களும் இந்தக் கோரிக்கையை முதல் கூட்டத் தொடரிலேயே வைத்தார்கள். அதில் என்னென்ன நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின்றன, என்னென்ன நிர்வாகச் சிக்கல்கள் இருக்கின்றன என்று பார்க்க வேண்டும். அதற்கென்று கூடுதலாக recurring cost வந்துவிடும்.

ஒரு பள்ளிக்கூடத்தை இரண்டாகப் பிரிக்கும்போது, தனியாக P.G. Teachers 9 பேரை நியமிக்க வேண்டியிருக்கும். மேலும், அதற்கு lab facilities தனியாக செய்து கொடுக்க வேண்டியிருக்கும். அதற்கான recurring cost ஒரு வருடத்திற்கு 50 இலட்சம் ரூபாய்க்குமேல் வருகின்ற அளவில் இருக்கும். அதுமட்டுமல்லாமல், கட்டடம் கட்ட வேண்டியிருந்தால், அதற்கான செலவினம் சுமார் 1 கோடி ரூபாய் ஆகும். எனினும், நீங்கள் அங்கு ஓர் அசாதாரண

[2023 ஜனவரி 13

சூழ்நிலை ஏற்பட்டுவிடக் கூடாது என்று சொல்கிறீர்கள். அங்கு மட்டுமல்ல; ஒட்டுமொத்த தமிழ்நாட்டில் எந்தவொரு இடத்திலும் அசாதாரண சூழ்நிலை ஏற்பட்டுவிடக் கூடாது என்று உழைக்கக்கூடியவர்தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். ஆக, அந்த வகையில், உங்களுடைய கோரிக்கையையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, அதற்கு ஏதேனும் சிறப்பு அனுமதியைப் பெற முடியுமா என்பதையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் அனுமதியோடு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நேற்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. ஜி.கே. மணி அவர்கள் பேசியதை, நான் என்னுடைய அறையிலிருந்தபடியே கேட்டுக்கொண்டிருந்தேன். அவர்கள் தமிழ் கட்டாயப் பாடம் குறித்து ஒரு கருத்தைச் சொன்னார்கள். இந்திய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கிக் கொடுத்த அண்ணல் அம்பேத்கர் அவர்கள், 'தாய்மொழியில் கல்வி இருக்கும்பொழுதுதான் கல்வி வளர்ச்சியடையும், அறிவு விரிவடையும்' என்று கூறியிருக்கிறார்கள். அந்த வகையில், நம்மிடையே இன உணர்வையும், மொழி உணர்வையும் ஊட்டி வளர்த்தவர், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய தம்பி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அவர்தான், Tamil Nadu Tamil Learning Act, 2006–ஐ very first time கொண்டு வந்தார். அதை, தற்போது ஒவ்வொரு batch wise ஆக கொண்டு வந்து கொண்டிருக்கிறோம். CBSE-ல் 2025–ல் படிக்கிற குழந்தைகள் 10 ஆம் வகுப்பு வரைக்கும் தமிழைக் கட்டாயமாகக் கற்க வேண்டும் என்கின்ற சூழ்நிலை இருக்கின்றது. But, 11th, 12th என்று போகும்போது CBSE என்பது வேறு Board. அவர்களை நாம் கட்டுப்படுத்த முடியாது என்று சொன்னாலும், அதையும் நாம் வலியுறுத்திக் கொண்டுதான் இருக்கிறோம். அந்த வகையில், அதையும் நாங்கள் விட்டுவிடாமல் பார்த்துக்கொள்வோம் என்பதை இந்த நேரத்தில் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]